தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத்துறையின் சார்பில், BS VI – 13 புதிய அரசு பேருந்துகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி , போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 24.07.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மேலாண் இயக்குநர் (த.அ.போ.க.) (கும்பகோணம்) கே.எஸ்.மகேந்திரகுமார், பொதுமேலாளர் (த.அ.போ.க. (புதுக்கோட்டை மண்டலம்) இரா.இளங்கோவன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பாலேகுளி அருள்மிகு பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பட்டாளம்மன் திருக்கோயில் மற்றும் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நாகமங்கலம், அருள்மிகு நீலகிரி அனுமந்தராய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான இடங்களை இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, இந்து சமய அறநிலைத்துறை மண்டல இணை ஆணையர் சுதர்சன் , மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினி செல்வம் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

என்.கௌதமன் பங்கேற்பு! ரூ.2,67 கோடி மதிப்பீட்டில்

நாகை மாவட்டத்தில் 5,538 மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள்!

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

நாகை, ஜூலை 26 - நாகை மாவட்டம் நாகை நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற மாணவ, மணவிகளுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் விழாவில் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

நாகை மாவட்டம் நாகை நகராட்சி பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் மேல் நிலை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகாஷ் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவரும், நாகை மாவட்டக் கழகச் செயலாளருமான என். கௌதமன், சட்ட மன்ற உறுப்பினர்கள் நாகை முகமதுஷா நவாஸ், கீழ்வேளூர் நாகைமாலி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், நாகை நகர்மன்ற தலைவர் இரா. மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுபாஷினி வரவேற்றார்.

விழாவில் நாகை மாவட்டத்தில் 11ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதி வண்டிகளை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு பல் வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றில் ஒன்று முதலமைச்சரின் காலை உணவு திட்டம். இத்திட்டமானது தொடக்கப்பள்ளி, நடுநிலப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாகை மாவட்டம் நாகை நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடைபெறும் விழாவில் நாகை மாவட்டத்தில் 11ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கு மாணவர்களுக்கு 2456 மிதி வண்டிகளும், மாணவிகளுக்கு 3082 மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு வழங்கப்படும் மிதி வண்டியின் விலை ரூ. 4,900மும், பெண்களுக்கு வழங்கப்படும் மிதி வண்டியின் விலை4,760 ஆகும். நாகை மாவட்டத்தில் இந்த கல்வியாண்டில் 11ம் வகுப்பு படிக்கும் 5,538 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 2.67 கோடி மதிப்பில் இலவச மிதி வண்டி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நான் முதல்வன் திட்டம், குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுததுவற்கான இல்லம் தேடி கல்வி திட்டம், தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் இல்லம் தேடி கல்வி திட்டம் 2,414 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் 36,169 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் மாவட்டங்களில் கல்வித்தரத்தை மேம்படுத்தவும், பள்ளியின் சுற்றுச்சூழல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்படுத்தவும் மாணவர்கள் பயமின்றி தேர்வினை எதிர்கொள்ளவம், தேர்ச்சி சதவிதத்தை அதிகப்படுத்தவும் பள்ளிக்கல்வி துறையின் வாயிலாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு போதை பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுகாதாரத்துறை, சமூக நலத்துறை, காவல்துறை, குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை ஆகியவை அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டு போதை பழக்கத்தின் தீமையினை உணர்த்தும் வண்ணம் பல் வேறு போட்டிகள் மற்றும் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்று வகின்றன. மேலும் பள்ளிகளுக்கும், பெற்றோர்களுக்கும் இடையேயான உறவினை மேம்படுத்தும் பள்ளியில் உட்கட்டமைப்பு மற்றும் மாணவர்களின் நலன் பாதுகாப்பு மேம்படுத்துவதற்கும் பள்ளி மேலாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடைபெற்று வருகிறது.

வருமானம் ஈட்டும் தாய், தந்தையர் விபத்தில் இறந்தால் அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தால் அக்குடும்பத்தை சார்ந்த மாணவர்களுக்கு 1 முதல் 12ம் வகுப்பு வரை வழங்கப்படும் நிதி ரூ. 75 ஆயிரம் ஆகும். இதுவரை நாகை மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் 76 மாணவர்கள் பயனைடந்துள்ளனர். மேலும் 40 மாணவர்களுக்கான கருத்துருக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார். விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோக நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா. குமார், என்.சதாசிவம், கே.பழனி யப்பன், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில் குமார், நாகை ஒன்றியக் குழு தலைவர் அனுசியா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், சத்தியமூர்த்தி, பாலமுரளி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கணேசன், மோகன்தாஸ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி. திலகர், வெற்றிலை கடை சிவா, சித்திராகு லோத்துங்கன், அபுபக்கர், நகர்மன்ற உறுப்பினர் சத்தியவாணி கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் வடக்கு மாவட்டம் - அவிநாசி ஒன்றிய - பேரூர் இலக்கிய அணி சார்பில்

17 ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் பாடல் ஒப்பித்தல் போட்டி!

ஆ.இராசா - மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - க.செல்வராஜ் பங்கேற்பு!

திருப்பூர், ஜூலை 26 - முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம் மற்றும் அவிநாசி ஒன்றிய, பேரூராட்சி இலக்கிய அணி சார்பில் நடைபெறும் 17ம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம் மற்றும் அவிநாசி ஒன்றிய, பேரூராட்சி இலக்கிய அணி சார்பில் 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் அவிநாசி மேற்கு வீதியில் அமைந்துள்ள தேவாங்கர் திருமண மண்டபத்தில் 17ம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் பாடல் ஒப்புவித்தல் போட்டி மாவட்ட இலக்கிய அணி தலைவர் அ.இராயப்பன் தலைமையில் பேரூர் இலக்கிய அணி அமைப்பாளர் ஆ.இராமசாமி வரவேற்புரையில் வடக்கு மாவட்டக் கழக பொருளாளர் சு.சாமி நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.சரவணன்நம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள் ஈ.ப.சிவப்பிர காஷ் (அவிநாசி) எஸ்.ஆர்.பழனிச்சாமி (திருமுருகன் பூண்டி) க.பால்ராஜ் (சேவூர்), திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ண மூர்த்தி, அவிநாசி பேரூர் கழக செயலாளர் வ.வசந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் லக்கி கே.ரவிச்சந்திரன் விழாவினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இவ்விழாவில் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் பிரகாஷ், குமார், பெங்காளியப்பன், பழனிச்சாமி, சுரேஷ்குமார், சுப்பிரமணி, அவிநாசி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவிநாசியப்பன், பூண்டி நகர்மன்ற தலைவர், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் நா.குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ராயர் குமார், பேரூர் கழக முன்னாள் செயலாளர் இரா. மனோகரன், நடுவச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் கே.சி.வரதராஜ், கலை இலக்கிய மாவட்ட அமைப்பாளர் சிடிசி ரமேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.என்.டி.விவேக், மாவட்ட விவசாய அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் பழனிச்சாமி, பேரூர் கழக முன்னாள் செயலாளர் கே.சி. பொன்னுச்சாமி, மாவட்ட வழக்கறிஞர் முன்னாள் துணை அமைப்பாளர் சு.பத்மநாபன், அவிநாசி பேரூர கழக துணை செயலாளர்கள் எம்.பருகத்துல்லா, எஸ்.சீனிவாசன், ஆர்.சாந்தி, பொருளாளர் தங்கவேல், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பிஆறுமுகம், டி.பி.வேலுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இறுதியில் மாவட்ட பிரதிநிதி எஸ்.பி.ஆறுமுகம் நன்றியுரையாற்றுகிறார்.

மயிலம் ஒன்றியம் - ரெட்டணை கிராமத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

திண்டிவனம், ஜூலை 26 - தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் முன்னிலை வகித்தார். சமூக பாதுகாப்பு திட்டத்தின் துணை ஆட்சியர் முகுந்தன் அனைவரையும் வரவேற்றார். கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதஞ்ஜெய் நாராயணன் திட்டவிளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்கள் இடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், தமிழக மக்களின் நலனுக்காக தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை அறிவித்து தொய் வின்றி மக்களுக்கு அரசின் சேவைகளாக கிடைக்கின்றன

முதல்வரின் முகவரி திட்டத்தின் தொடர்ச்சியாகவே மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களாட்சியின் தத்துவப்படி எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். என்பதற்காகவே இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயல்படுத்தி வருகின்றனர்.

காலை சிற்றுண்டி திட்டம் பொதுமக்களிடம்.,குழந்தை களிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது., இந்த திட்டம் உலகளவில் வரவேற்பை பெற்றுள்ளது. இதை நாம் பாராட்டுவதற்கு கடமைப்பட்டு ள்ளோம். பெண்கள் கட்டண மின்றி பேருந்தில் பயணித்து பயன் பெற்று வருகின்றனர். தேவையானதை பெற்றுக் கொள்ளவே மக்களுடன் முதல்வர் திட்டம்.

பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களை அரசு அதிகாரிகள் யாரும் காகிதமாக எண்ணிவிடக் கூடாது. ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் எனக்கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் நாட்டில் மக்களுடன் முதல்வர் திட்டம் 12,500 ஊராட்சிகளில் 2500 இடங்களிலும் விழுப்புரம் மாவட்டத்தில் 68 ஊராட்சிகளில் 91 இடங்களில் இம்முகாம் நடைபெற்று வருகிறது .

அனைத்து ஊராட்சிகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காணுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார். மேலும் மக்களுக்கு தேவையான உணவு உடை இருக்க இடம் இந்த மூன்றையும் அளிக்கக் கூடிய ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் இதையும் கடந்து குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம் உயர் கல்வி படிப்பதற்கு புதுமைபெண் திட்டத்தை தொடங்கி வைத்து பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி அவர்கள் படிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும், முதலமைச்சர் வழங்கி வருகிறார்.

மேலும் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் திண்டிவனம் சிப்காட் தொழிற்சாலை அமைத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திய ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் . இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

தொடர்ந்து மக்களுடன் முதல்வர் முகாம் முடிவடைவதற்குள் முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய வேண்டி கொடுத்த மனுக்கள் மீது மின்சாரத் துறையினர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கான உத்திரவினை பயனாளிகளுக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

இதில் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், திண்டிவனம் சார்ஆட்சியர்திவ்யான்ஷு நிகம்,வட்டாட்சியர் சிவா, வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி,மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய செயலாளர் மணிமாறன், செழியன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் ,பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,ஒன்றிய துணை சேர்மன் புனிதா,மாவட்ட கவுன்சிலர்கள் மகேஸ்வரி,விஜயன்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராஜ் பரத்,சம்சுதீன் பாபு, ஜெய்சங்கர், ஞானசேகர். கண்ணன், சரசு ஆறுமுகம், சாந்தகுமார் ,ஜெயந்தி சேகர், தனலட்சுமி ஆறுமுகம்,ஊராட்சி மன்ற தலைவர்கள் குமுதாரமேஷ், வசந்தா விநாயகம் ,முத்துசாமி, பாபு, மகாலட்சுமி கமலக்கண்ணன், இந்திரா சுரேஷ் ,ஜெகதீஸ்வரி பிரகாஷ் ,திமுக நிர்வாகிகள்மாவட்ட அமைப்பாளர்கள் அன்சாரி,சந்திரன், செந்தில்குமார்,மாவட்ட பிரதிநிதிகள் சேகர்,பிரகாஷ், ,பிரபு,அன்பு சேகர்,உதயவாணன்,

உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ் நன்றி கூறினார்,

சென்னை ஈ.எஸ்.ஐ. மருந்தகங்களில் ஆய்வு!

அமைச்சர் சி.வெ.கணேசன் மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை 26 - சென்னை ஈ.எஸ்.ஐ. மருந்தகங்களில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திடீர் ஆய்வு செய்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை அமைச்சர் சி.வெ. கணேசன் 25.07.2024 காலை ஏழு மணி முதல் சென்னை, கொண்டித்தோப்பு மற்றும் சூளை பகுதிகளில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் திடீர் ஆய்வு செய்தார்.

இந்த மருந்தகங்களின் காப்பாளர்கள் மொத்தம் 31 ஆயிரம் நபர்கள் ஆவார்கள். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன், மருந்தகங்களுக்கு வருகை புரிந்த வெளி நோயாளிகளிடம் முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா? என்பது குறித்தும், மருத்துவர்கள் பணியாளர்கள் உரிய நேரத்தில் வருகிறார்களா? என்பது குறித்தும் ஆய்வு செய்தார். அதுமட்டு மல்லாமல், போதுமான அளவில் மருந்துகள் இருப்பில் உள்ளதா? என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.

உடன் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளின் இயக்குனர் மருத்துவர் இளங்கோமகேஸ்வரன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இருந்தனர்.

மேடவாக்கம் நெடுஞ்சாலையில் மெட்ரோ ரயில் பணி;

சென்னை, ஜூலை 26 – மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்ட அறிக்கை: மேடவாக்கம் நெடுஞ்சாலையில் வாணுவம்பேட்டைக்கும் மேடவாக்கம் கூட்ரோடுக்கும் இடையே மெட்ரோ ரயில் பணிகள் நடந்து வருகிறது. தற்போது கீழ்கட்டளை, மடிப்பாக்கம், புழுதிவாக்கம் ஆகிய பகுதிகளில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைத்திட பணிகள் நடந்து வருவதால், அப்பகுதியில் செல்லும் கனரக வாகனங்கள் மாற்றுப்பாதையில் செல்ல மெட்ரோ ரயில்நிறுவனத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது கீழ்கட்டளை யிலிருந்து மடிப்பாக்கம், கைவேலி வழியாக இயக்கப்பட்ட தடம் எண். 18D, 18P, M1, 45ACT நாளை முதல் மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து கைவேலி வழியாக இயக்கப்பட உள்ளது.

தடம் எண்.14M மேடவாக்கம் கூட்ரோட்டிலிருந்து கீழ்கட்டளை வழியாக என்.ஜி.ஓ. காலனிக்கு இயக்கப்பட்ட பேருந்து நாளை முதல் மேடவாக்கம் கூட்ரோட்டிலிருந்து ஈச்சங்காடு, காமாட்சி மருத்துவமனை, கைவேலி, வழியாக கிண்டி ரயில் நிலையத்திற்கு இயக்கப்பட உள்ளது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து திட்டங்களும் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று நோக்கில் சூளகிரி ஊராட்சி ஒன்றியம் பேரிகை மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை மாவட்டச் செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் நாகேஷ், ஊராட்சி மன்ற தலைவர் பிரவீன்குமார், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் "மக்களுடன் முதல்வர் திட்டத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தொடங்கி வைத்தார்.